सत्यमेव जयते

**இந்தியத் துணைத் தூதரகம்**

**யாழ்ப்பாணம்**

**ஊடக அறிக்கை**

மேன்மை தங்கிய யஷ்வர்தன் குமார் சின்ஹா, இலங்கைக்கான இந்தியத் தூதுவர், அவர்கள் இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயமாக யாழ்ப்பாணத்துக்கு 4, 5 செப்ரெம்பர் தினங்களில் வருகை தந்துள்ளார். இலங்கை ஜனாதிபதிக்கு தனது உத்தியோக பூர்வ கடமை ஏற்புக்கடிதத்தை கையளித்த பின்னர் அவர் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும்.

இந்திய வீட்டுத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் நாவலடி, அரியாலையில் கட்டப்பட்ட வீடுகளுக்கு அவர் சென்றார். இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் பயனாளரால் கட்டப்படும் வீடு ஒன்றை எழுதுமட்டுவாழில் அவர் திறந்த வைத்தார். இவ்வாறான வீடுகளைப் பெற்ற பயனாளர்களுடன் அவர் அளவளாவினார்.

நான்காம் திகதி மதியம் வட மாகாண ஆளுனர் கௌரவ திரு. சந்திர சிறி அவர்களுடன் ஒரு சந்திப்பை மேற்கொண்டார். வாழ்த்துக்களை தெரிவித்தபின்னர் இந்திய அரசால் பொறுப்பேற்கப்பட்ட நடைமுறையிலுள்ள திட்டங்களின் முன்னேற்றம் பற்றி ஆளுனருக்கு தெரிவித்தார். ஆளுனர் அவர்கள் விவசாயம், மீன்பிடி, கல்வி, சுகாதாரம், கைத்தொழில் மற்றும் போக்குவரத்து உட்கட்டுமானம் போன்ற துறைகளில் வடமாகாண மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காக செய்யப்படும் அனைத்து உதவிகளுக்கும் பெரியளவிலான நன்றியை தெரிவித்தார். ஆளுனர் அவர்கள் தமது இல்லத்தில் தூதுவருக்கு மதிய விருந்தளித்தார்.

தூதுவர் அவர்கள் மாலையில் சங்கிலியன் தோப்பில் நடைபெற்ற “தெய்வீக சுகானுபவம்- 2” கலாச்சார நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். அங்கு பத்மசிறி லீலா சாம்சன் அவர்களால் பரதநடனம் மிக உன்னதமாக அளிக்கை செய்யப்பட்டது. வைபவத்தில் உரையாற்றும் போது தூதுவர் அவர்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவகாலத்தில் தாம் யாழ்ப்பாணம் வருகை தந்தமையையிட்டு தமது மகிழ்ச்சியை தெரிவித்தார். இந்திய அரசால் வட மாகாணத்துடனான கலாச்சார உறவைப் புத்துயிரூட்ட எடுக்கப்படும் பல்வேறு நடவடிக்கைகளில் இந்தக் கலாச்சார நிகழ்வும் ஒன்று என அவர் மேலும் குறிப்பிட்டார். நிகழ்வை ஒழுங்கமைப்பதற்கு வட மாகாண கௌரவ ஆளுனர் அவர்கள் வழங்கிய ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

........

யாழ்ப்பாணம்

05 செப்ரெம்பர் 2013